2000 மே 11] [கலைஞர் மு. கருணாநிதி]

அந்த விசாரணைக்குப் பிறகு அந்தக் குடும்பத்திற்குத் தர வேண்டிய நிவாரண நிதியைப் பற்றிப் பிறகு அறிவிக்கலாம் என்று இந்த நேரத்திலே உறுதி கூறி, இந்த அளவில் அமைகின்றேன்.

முற்பகல் 10-45

(ஆ) திருவில்லிபுத்தூர் பேருந்து நிலையத்தில் அறிஞர் அண்ணா சிலை சாய்ந்து பெண் இறப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, திருவில்லிபுத்தூரில் பேருந்து நிலையத்தில் அறிஞர் அண்ணா சிலை விழுந்து பெண் ஒருவர் இறந்தது குறித்து சிறப்புக் கவன ஈர்ப்பாக திரு. இரா. தாமரைக்கனி அவர்கள் கொடுத்திருக்கிறார்கள். சுருக்கமாகப் பேச வேண்டும், திரு. இரா. தாமரைக்கனி.

***திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவில்லிபுத்தூர் நகர அறிஞர் அண்ணா பேருந்து நிலையத்தில் அறிஞர் அண்ணா அவர்களுடைய சிலை இருக்கிறது. இந்தச் சிலையையும், அண்ணா பேருந்து நிலையத்தினுடைய வளைவையும் சுமார் 30 ஆண்டுகளுக்கு முன்பாக தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள்தான் திறந்து வைத்தார்கள். அந்த அண்ணா சிலையினுடைய அஸ்திவாரம் சரியாக இல்லாத காரணத்தாலும், திருவில்லிபுத்தூர் நகரில் கனமழை பெய்த காரணத்தாலும், சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ஒரு சோடியம் லைட் பக்கத்தில் போட்டார்கள், அதனால் ஒரு பெரிய பள்ளம் தோண்டப்பட்டது, திருவில்லிபுத்தூர் அருகே உள்ள வத்திராயிருப்புக்கு அருகே உள்ள சதுரகிரி மகாலிங்கம் கோயிலுக்குச் செல்வதற்காக இலட்சுமி என்ற அம்மையார் அவர்கள் திருவில்லிபுத்தூர் பஸ் நிலையத்திற்கு வந்தார்கள். வரும்போது, மழை பெய்த காரணத்தாலும், அண்ணா சிலை ரொம்ப கொதிம்பிபோய் அஸ்திவாரம் சரியில்லாத காரணத்தினாலும் திடீரென்று அண்ணா சிலை விழுந்து அந்தப் பெண்ணை பள்ளத்தில் அமுக்கி இறக்க நேரிட்டது. அந்த அம்மையாருக்கு இரண்டு பெண் குழந்தைகளும், ஒரு மகனும் இருக்கிறார்கள்; ஏழையெளிய தச்சுக் குடும்பத்தைச் சேர்ந்தவர்; அன்றன்றைக்கு மரவேலை செய்து பிழைக்கின்ற குடும்பத்தைச்

சேர்ந்தவர். இதே அவையில் முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அவர்கள் இருக்கும்போது, டாக்டர் கலைஞர் அவர்கள் எதிர்க்கட்சித் தலைவராக இருக்கும்போது, இதே சதுரகிரி மகாலிங்கம் கோயிலுக்குச் செல்லும்போது, காட்டாற்று வெள்ளத்திலே அடித்துச் செல்லப்பட்ட 38 பேர் குடும்பங்களுக்கு நிதியுதவி பண்ண வேண்டுமென்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் எதிர்க்கட்சித் தலைவராக இருக்கும்போது முறையிட்டவுடனே எம்.ஜி.ஆர். அவர்கள் காட்டாற்று வெள்ளத்திலே அடித்துச் செல்லப்பட்டு இறந்த அந்தக் குடும்பங்களுக்கு நிதி உதவியெல்லாம் செய்தார்கள். ஆகவே, சதுரகிரி மகாலிங்கம் கோயிலுக்குப் போய் ஏதாவது வேண்டுதல் செய்து குடும்பம் நல்ல நிலையில் வாழ வேண்டுமென்று சொல்லி என்னென்ன கனவுகளைக் கண்டார்களோ அப்பேர்ப்பட்ட அந்தத் தாயினுடைய வயிற்றில் பிறந்திருக்கிற 3 குழந்தைகளுக்கு உதவ வேண்டும். ஏழைக் குடும்பம். அண்ணா சிலை நீங்கள் திறந்து வைத்த சிலை. அந்த அண்ணா சிலையை தி.மு.க. சார்பிலே வைத்தாலும், நாங்கள் அ.தி.மு.க. சார்பிலே சிலைக்கு முன் கல்வெட்டு வைத்து பக்கத்தில் எம்.ஜி.ஆர். சிலையை வைத்திருக்கிறோம். அதற்கு அரசு அனுமதி கொடுத்திருக்கிறது. அதற்காக ரொம்ப நன்றி. ஆகவே அண்ணா சிலை விழுந்து இறந்த அந்த இலட்சமி அம்மாள் குடும்பத்திற்கு கருணை உள்ளத்தோடு — உங்களிடம் நிதி இருக்கிறது, பெயரும் கலைஞர் கருணாநிதி என்று இருக்கிறது — நிதி கொடுத்து நீங்கள் உதவி செய்யுமாறு கேட்டு அந்தக் குடும்பத்தை வாழ வைக்க வேண்டுமாய்க் கேட்டு விடைபெறுகிறேன், நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 11-8-1999 அன்று திருவில்லிபுத்தூரில் கனமழை பெய்திருந்தது. அங்கே நகர்மன்ற பேருந்து நிலையம் அருகில் அண்ணா அவர்களின் மார்பளவு வெண்கலச் சிலை ஒன்று இருந்தது. 11-8-1999 தேதியை ஞாபகப்படுத்துகின்றேன். இது அண்மையில் நடைபெற்ற நிகழ்ச்சி அல்ல. இருந்தாலும்கூட தாமரைக்கனி என்பதால் இந்த ஒத்திவைப்பு அல்லது கவனமூட்டல் இடம் பெற்றிருக்கிறது. அதற்கு ஹைமாஸ்ட் விளக்கு வைப்பதற்காக பிளாட்பாரத்தின் அருகே மண் தோண்டப்பட்டிருந்தது. அன்று பெய்த மழையினால் அண்ணா அவர்களின் சிலையும் அதற்கு

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

மேலே போடப்பட்டிருந்த சிமெண்டிலான கூரையும் கீழே சாய்ந்து விட்டது. அப்போது சிலை அருகே இருந்த சிவகாசி நகரைச் சேர்ந்த செல்லையா என்பவருடைய மனைவி 35 வயதுடைய இலட்சுமி சிலையின் பீடத்தின் அடியில் சிக்கி இறந்துவிட்டார்.

மேற்படி பணி செய்த ஒப்பந்தக்காரர் தனது சொந்தப் பொறுப்பில் இறந்தவருடைய கணவருக்கு நஷ்ட ஈடாக 25 ஆயிரம் ரூபாயை அளித்துள்ளார். அண்ணா சிலை கீழே விழுந்தபோதிலும் சிலைக்கு பாதிப்பு ஏதுமில்லை. மறுபடியும் 27-1-2000 அன்று அதே இடத்தில் சிலை வைக்கப்பட்டுவிட்டது. இதுகுறித்து திருவில்லிபுத்தூர் நகரக் காவல் நிலையத்தில் குற்ற எண் 747/99 இல் வழக்கு ஒன்றும் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இந்த விபத்து குறித்து அரசு நிவாரணத் திட்டங்களின்கீழ் நிவாரணத் தொகை வழங்க பரிசீலனை செய்யப்பட்டது. இறந்தவருடைய கணவரான திரு. செல்லையா வருமானம் ஈட்டும் குடும்பத் தலைவராக இருப்பதால் நலிந்தோர் உதவித் திட்டத்தின்கீழ் தகுதியற்றவர் ஆகிறார். விபத்து நிவாரணத் திட்டத்தின்கீழ் வழங்குவதற்கும் ஏற்கெனவே அனுமதிக்கப்பட்ட 47 இனங்களில் இந்த இனம் சேர்க்கப்படவில்லை. இருந்தாலும் அவரது குடும்ப நிலையையும் விபத்து நடந்த தன்மையையும் எண்ணிப் பார்த்து அந்தக் குழந்தைகளுடைய பராமரிப்பை எண்ணிப் பார்த்து, 5 நிமிடங்களுக்கு முன்புதான் திரு. தாமரைக்கனி அவர்கள் இந்த அரசைத் தாக்கிப் பேசியிருந்தாலும்கூட, திரு. தாமரைக்கனி அவர்களுடைய வேண்டுகோளை ஏற்று முதல்வர் நிதியிலிருந்து 15,000 ரூபாய் அந்தக் குடும்பத்திற்கு வழங்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-50

திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்னும் ஏகப்பட்டது, பேசுவதற்கு இருக்கிறது. நீங்கள் உட்காருங்கள்.